வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ஈழநாடு



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. money transfer மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER ரியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 15.09.2025 திங்கட்கிழமை இதழ் : 258 பக்கங்கள் : 08

# பிரச்னைகளுக்கு தீர்வு காண ஜனாதிபதியுடன் நேரடி பேச்சு

## கடிதம் மூலம் கோருவதற்கு தமிழ் அரசு கட்சி முடிவு

ஆலையடிவேம்பு, செப்ரெம்பர் 15

**தமிழ் மக்களின் பிரச்னை உட்பட பல்வேறு பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்காக நேரடி பேச்சுக்கு நேரம் ஒதுக்கித் தருமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவிடம் இலங்கை தமிழ் அரசு கட்சி கோரிக்கை முன்வைக்கவுள்ளதாக அந்தக் கட்சியின் பதில் பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்துள்ளார்.**

நேற்றைய தினம் இலங்கை தமிழ் அரசு கட்சியின் மத்திய குழுக் கூட்டம் அம்பாறை - ஆலையடிவேம்பில் நடைபெற்றது.

இதன்பின்னர் ஊடகங்க ளுக்கு கருத்து வெளியிட் டபோதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்த முக்கிய அம் சங்கள் வருமாறு,

ரோம் சட்டத்தில் இலங்கை கையெழுத்திட வேண்டும் என்று ஐ. நா. மனித உரிமைகள் பேர வையின் ஆணையாளர் தமது அறிக்கையில் வலி யுறுத்தியமையை வர வேற்கிறோம். இது விட யத்தில் உறுப்பு நாடுகள் இலங்கைக்கு தொடர்ச்சி யான அழுத்தத்தைப் பிர யோகிக்க வேண்டும். மனித உரிமைகள் பேரவை யில் இலங்கை தொடர் பான விடயங்கள் தொடர்பில் உறுப்பு நாடு களில் ஒன்றான பிரித் தானியாவுடன் நாம் தொடர்பில் இருக்கிறோம்.

07

# நீதி அமைச்சர் தலைமையில் ஜெனிவா செல்கின்றது குழு!

கொழும்பு, செப். 15

நீதி அமைச்சர் ஹர்சன ராஜகருணா, பிரதி அமைச்சர் முனீர் மௌலவி உட்பட அந்த அமைச்சின் அதிகாரிகள் கொண்ட சிறப்பு குழு இந்த வாரம் ஜெனிவா செல்கி றது.

ஐ. நா. மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் ஜெனிவாவில் நடக்கிறது. இதில், பங்கேற்கவே இந்தக் குழு அங்கு செல்கிறது.

வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தலைமை யிலான குழு கடந்த திங்கட்கிழமை ஜெனிவா சென்று இலங்கையின் நிலைப்பாட்டை

07

மனித உரிமைகள் விவகாரம்

# பாதுகாப்பு பிரதி அமைச்சர் விசாரிக்கப்பட வேண்டும்!

## செல்வம் அடைக்கலநாதன் எம். பி.

மன்னார், செப். 15

நாட்டில் போர் குற்றம் எதுவும் இடம்பெறவில்லை என்று பாதுகாப்பு பிரதி அமைச்சர் கூறிய கருத்தை ஏற் றுக் கொள்ள முடியாது. அவரின் கருத்துகளை வைத் துப் பார்க்கின்றபோது அவர் உண்மையில் மனித உரி மைகள் மீறலில் சம்பந்தப்பட்டுள்ளாரா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது. எனவே, அவர் விசாரிக்கப்பட வேண்டும் என்று வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல் வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

நாட்டில் எந்தவிதமான போர் குற்றங்களும் மனித உரிமைகள் மீறலும் இடம்பெறவில்லை. போரிலே சில அசம்பாவிதங்கள் இடம்பெற்றிருக்கலாம்.

07

# சிறீநேசன் எம். பி. விபத்தில் காயம்!

மட்டக்களப்பு, செப். 15

இலங்கை தமிழ் அரசு கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஞா. சிறீ நேசன் விபத்தில் காய மடைந்துள்ளார்.

களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்துக்கு அண்மையாக அவரின் வாகனமும் கார் ஒன்றும் மோதி இந்த விபத்து இடம்பெற்றது.

நேற்று ஞாயிற்றுக் கிழமை அம்பாறை - ஆலையடி

07

# மனித உரிமை ஆணையாளரின் கண்காணிப்புக்குள் இலங்கை!

## இரு வாரங்களுக்குள் தீர்மானம் நிறைவேறும்

ஜெனிவா, செப். 15

இலங்கை அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையர் பணிமனையின் மேற்பார் வையின் கீழ் இருக்கும் வகையில் பிரேரணை சமர்ப்பிக்கப்படவுள்ளது. இதன்படி, மனித உரிமை கள் பேரவையின் அதிகா ரத்தை நீடிக்கும் இந்த வரைவு பிரேரணை அடுத்த இரண்டு வாரங் களுக்குள் பேரவையில் நிறைவேற்றப்படும் என்று தகவல்கள் வெளியாகியுள் ளன.

இந்தநிலையில், இலங் கையின் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகள் குறித்த முன்னேற்றம் தொடர்பில் அடுத்த விரிவான அறிக்கை, 2027 செப்ரெம் பரில் முன்வைக்கப்பட வுள்ளது.

இந்தத் தீர்மானத் துக்கு இலங்கை தொடர் பான நாடுகளான பிரித் தானியா, கனடா, மலாவி, மொண்டினீக்ரோ, வடக்கு மசிடோனியா ஆகிய நாடுகள் ஆதரவு வழங்கவுள்ளன.

இதன்படி,

07

# ஐஸ், ஹெரோயினுடன் நால்வர் யாழில் கைது!

- த. பிரதீபன் -

யாழ்ப்பாணம், செப் 15

ஐஸ், ஹெரோயின் போதைப்பொருட்களுடன் யாழ்ப் பாணம் பொலிஸ் பிரிவுக்குள் நால்வர் கைது செய்யப் பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் நகர பகுதியில் ஐஸ் போதைப்பொரு ளுடன் இருவர் கைது செய்யப்பட்டனர். 40, 54 வயது நபர்களே இவ்வாறு கைதாகினர். அவர்களிடமி ருந்து 27 கிராம் 100 மில்லிகிராம் ஐஸ் போதைப் பொருள் கைப் பற்றப்பட்டது.

07

# தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் இன்று!

யாழ்ப்பாணம், செப். 15

தமிழ் மக்களின் உரிமைக்காக 12 நாட்கள் உணவையும் நீரையும் ஒறுத்து உயிர்த் தியாகம் செய்த தியாகதீபம் திலீபனின் 39ஆவது ஆண்டு நினைவேந்தல் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகிறது.

இன்று காலை 9.00 மணியளவில் நல்லூர் ஆலயம் அருகே அவர் உண்ணாவிரதம் இருந்த இடத்தில் அஞ்சலி நடைபெற்று, தொடர்ந்து, நல்லூரில்

07

மாகாண சபைகள் தேர்தல்:

# பழைய முறையில் நடத்த பரிசீலிக்கிறது அரசாங்கம்

கொழும்பு, செப். 15

பழைய முறைமையின்கீழ் மாகாண சபைகள் தேர் தலை நடத்துவது குறித்து அரசாங்கம் பரிசீலித்து வருகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

எல்லை நிர்ணய செயல்முறை முடிவடைந்த பின் னரே தேர்தல் நடத்தப்படும் என்று அரசாங்கம் முன் னர் கூறியிருந்தது. எனினும், புதிய எல்லை நிர்ணய செயல்முறை சிக்கலானது, நீண்டது என்பதால், அடுத்த தேர்தலை, 1988ஆம் ஆண்டு மாகாண சபை கள் தேர்தல் சட்டத்தின்கீழ் நடத்த ஆலோசிக்கப் பட்டுள்ளது என்று கொழும்பு ஆங்கில நாளி தழ் ஒன்று தெரிவித்துள்ளது.

07

# குருக்கள்மடம் புதைகுழி; அடுத்த வாரம் அகழப்படும்

மட்டக்களப்பு, செப். 15

குருக்கள்மடம் மனிதப் புதைகுழியின் அகழ்வு நடவ டிக்கைகளை அடுத்த வாரம் ஆரம்பிப்பதற்கு தீர்மானிக் கப்பட்டுள்ளது.

இதற்காக 29 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ள தாக நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு பிரதியமைச்சர் முனீர் முளப்பர் தெரிவித்துள்ளார்.

களுவாஞ்சிக்குடி நீதிவான் விடுத்த உத்தர வுக்கு அமைய குருக்கள்மடம் மனித புதைகுழியின்

07

# கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் விபத்தில் உயிரிழப்பு

திருகோணமலை, செப். 15

கிழக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் கு. நாகேஸ்வரன் (வயது 71) நேற்று இடம்பெற்ற வீதி விபத் தில் உயிரிழந்தார்.

திருகோணமலை அநுராதபுரம் சந்தியில் விபுலா னந்த பாடசாலைக்கு முன்பாகவுள்ள பாதசாரி கடவையை அவர் கடக்க முயன்றபோது மோட்டார் சைக்கிளில் வந்த பெண் ஒருவர் மோதியதில் அவர் உயிரிழந்தார்.

இந்த விபத்து தொடர்பில் மேலதிக விசாரணை களை உப்புவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின் றனர். (ஐ)

# மாகாண சபைகள் தேர்தலை உடனடியாக நடத்தவேண்டும்

## பவ்ரல் அமைப்பு வலியுறுத்து

கொழும்பு, செப். 15

நீண்ட காலமாகத் தாமதமாகி வரும் மாகாண சபைக ள் தேர்தலை நடத்த உடனடியாக நடவடிக்கை எடுக்கு மாறு பவ்ரல் அமைப்பு அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளது.

பொது நிர்வாகம், உள்நாட்டு விவகாரங்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சந்தன அபே ரத்னவுக்கு அந்த அமைப்பு அனுப்பியுள்ள கடிதத்தி லேயே இந்த விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், மாகாண சபைகள் அமைப்பு ஒரு பிரதி நிதித் துவ ஜனநாயக கட்டமைப்பாக மீண்டும் நிறுவப்பட வேண்டியது.

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளம், போக்குவரத்துக்கு இடையூறான கட்டுமானங்களை உடன் அகற்றவேண்டும்

## நல்லூர் பிரதேச சபை தவிசாளர்

யாழ்ப்பாணம், செப். 15

நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட பகுதிகளில் வெள்ளநீர் வடிந்தோடவும் போக்குவரத்துக்கு இடையூறாகவும் உள்ள கடுமானங்களை இன்று முதல் 14 நாட்களுக்குள் குடியிருப்பாளர்கள் அகற்றவுண்டும் என்று நல்லூர் பிரதேச சபை தவிசாளர் ப. மயூரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தவிசாளர் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளவை வருமாறு,

மழைகாலத்தில் சீராக வெள்ளம் ஓடுவதற்கு ஏதுவாக நல்லூர் பிரதேச சபைக்கு உட்பட்ட வடிகால்கால்களை துப்புரவு செய்யும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

நல்லூர் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட வடிகால்களை தூய்மைப்படுத்த இடையூறாக வடிகால்களுக்குமேல் கட்டப்பட்டுள்ள கட்டுமானங்களையும் வீதிகளில் போக்குவரத்து மற்றும் வெள்ள நீரோட்டத்துக்கு இடையூறாக காணப்படுகின்ற நிலக்கற்கள், கட்டுமானங்கள், பூச்செடிகள் என்பவற்றையும் இன்று திங்கட்கிழமை முதல் 14 நாட்களுக்குள் அகற்றுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச சபையின் இந்த பகிரங்க அறிவித்தலுக்கு ஏற்ப மேற்படி இடையூறுகளை ஏற்படுத்தும் விடயங்களை குடியிருப்பாளர்கள் அகற்றப்படாவிடின் எதிர்வரும் 01 ஆம் திகதியிலிருந்து எவ்வித முன் அறிவித்தலுமின்றி நல்லூர் பிரதேச சபை அவற்றை அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும் - குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

# பொன். சுகந்தனின் ஆன்மீக பணி ஆவண நூல் வெளியீடு



வடமராட்சி, செப். 15

பொன். சுகந்தனின் ஆன்மிக பணி என்னும் ஆவண நூல் வெளியிட்டு வைக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வு பொன். சுகந்தன் இரசிகர் வட்டத்தால் அதன் தலைவர் பா. முருகானந்தன் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

உடப்பு இந்துநெறி கழக மண்டபத்தில் நடந்த இந்த நிகழ்வில் முதல் பிரதியை உடப்பு இந்து ஆலய பரிபாலன சபையின் தலைவர் வை. கந்தசாமி பெற்றுக் கொண்டார். (ஐ-02)

# சிறுமி பாலியல் வன்புணர்வு; இளைஞர்கள் இருவர் கைது!

முல்லைத்தீவு, செப். 15

சிறுமி ஒருவர் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்திய குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அத்துடன், இந்தச் செயலுக்கு உடந்தையாக இருந்த மற்றோர் இளைஞரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு - உடையார் கட்டு பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. 15 வயதான சிறுமியை 23 வயது இளைஞர் சுதந்திரபுரம் பகுதியிலுள்ள வீடு ஒன்றுக்கு அழைத்துச் சென்று வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அறிந்த சிறுமியின் உறவினர்கள் புதுக்குடியிருப்பு பொலிஸில் முறைப்பாடு செய்தனர். இதற்கமைய சந்தேகநபரான 23 வயது இளைஞர் கைது செய்யப்பட்டார்.

அத்துடன், இந்தச் சம்பவத்துக்கு உடந்தையாக இருந்த வீட்டின் உரிமையாளரான 23 வயது இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான இருவரையும் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

# சீனோரின் காரைநகர் தொழிற்சாலை பணிகள் மீண்டும் ஆரம்பமாகின்றன

யாழ்ப்பாணம், செப். 15

சீனோர் நிறுவனன் காரைநகர் தொழிற்சாலையின் தொழிற்பாடுகள் எதிர்வரும் வியாழக்கிழமை 18ஆம் திகதி முதல் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படவுள்ளன.

பைபர் மூலப்பொருளைக் கொண்டு அனைத்து வகையான பொருட்களையும் உற்பத்தி மற்றும் பரும்படியாக்கம் செய்து சந்தைப்படுத்தும் செயன்முறையை மேற்கொள்ளும் முகமாக இத் தொழிற்சாலை செயல்படவுள்ளது.

இதற்கான ஆயத்த வேலைகள் ஆரம்பமாகி முன்னோட்டமாக படகு, மீன் விற்கும் தாங்கி, மீன் குஞ்சு வளர்ப்புத் தொட்டி என்பன உற்பத்தியாக்கப்பட்டுள்ளன.

குறித்த நிறுவனம் கடல் தொழில் சார் பொருட்களை உற்பத்தி மற்றும் பரும்படியாக்கும் நோக்கத்துடனேயே இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டிருந்தபோதும் தற்போது யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்படும் தொழிற்சாலை அதிக கேள்வியுள்ள ஏனைய பைபர் மூலப்பொருள்சார் பொருட்களையும் தயாரிக்கத் தயார்ப்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



வடக்கு மாகாணத்தின் கடற்றொழில் சார் உபகரணத் தேவைகளைத் தன்னிறைவோடு வழங்கும் நிலையமாக இது அமையும். இதன்வழி சுமார் 100 - 150 திறன் வேலைவாய்ப்புகள் உருவாகச் சாத்தியமுள்ளது.

தற்போதைய நிலையில், சாதாரண கட்டுமரம் அளவிலான தோணி முதல் 30 அடி நீளமான படகுகள் வரை, 1 - 2 மீற்றர் வரையான விட்டம் கொண்ட மீன் வளர்ப்புத் தொட்டிகள், மீன் விற்கும் வண்டிகளில் பொருத்துவதற்கான குளிரூட்டக்கூடிய பெட்டி என்பன இங்கு தயாரிக்க ஏற்பாடுகள் பூர்த்தியாகியுள்ளது.

எதிர்வரும் 18ஆம் திகதி மாலை குறித்த தொழிற்சாலையை கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், அமைச்சர் பிமல் ரத்நாயக்க ஆகியோர் ஆரம்பித்து வைக்கவுள்ளனர். (ஐ)

# 1,600 கிலோ மஞ்சள் சிக்கியது

இராமேஸ்வரம், செப். 15

சட்டவிரோதமாக இலங்கைக்கு கடத்தவிருந்த 1,600 கிலோ மஞ்சளை தமிழ்நாடு பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

மண்டபம் பகுதிக்கு அடுத்துள்ள வேதாளை கடற்கரையில் பதுக்கி வைக்கப்பட்ட மஞ்சளே நேற்று ஞாயிற்றுக்கிழமை இவ்வாறு கைப்பற்றப்பட்டது.

இந்த மஞ்சள் 40 மூடைகளில் வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்தது. சந்தேகநபர்களை கைது செய்ய பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# தேர்தல் ஆணைக்குழுவின் சேவை; நெடுந்தீவில் நாளை விழிப்புணர்வு!

யாழ்ப்பாணம், செப். 15

தேர்தல் ஆணைக்குழுவின் சேவைகள் தொடர்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்வுகள் நாளை செவ்வாய்க்கிழமை நெடுந்தீவில் நடைபெறவுள்ளன.

தேர்தல் ஆணைக்குழுவால் சர்வதேச ஜனநாயக தினத்தை யொட்டி தேர்தல் ஆணைக்குழுவின் சேவைகளை திணைக்களங்கள், பாடசாலைகள் மத்தியில் அறிமுகப்படுத்தும் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடத்தப்படுகிறது.

இதன்படி, நெடுந்தீவு பிரதேச பாடசாலைகளில் கல்வி கற்கும் 16 வயதுக்கு மேற்பட்ட மாணவர்கள் மற்றும் ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவுகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட இளைஞர், யுவதிகளுக்கான இ- சேர்விஸ் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி திட்டம் நடைபெறவுள்ளது.

நெடுந்தீவு மகா வித்தியாலயத்தில் நாளை செவ்வாய்க் கிழமை மு.ப 9.30 தொடக்கம் மு.ப 11.15 வரை மாணவர்களுக்கும் 11.30 தொடக்கம் 12.45 வரை இளைஞர், யுவதிகளுக்கான நிகழ்வும் நடைபெறவுள்ளன. (ஐ-05)

# நினைவேந்தல் நிகழ்வுகளை சைக்கிள் அணி குழப்புகிறது

## சாடுகிறார் மணிவண்ணன்

யாழ்ப்பாணம், செப். 15

தாயகத்தில் நடக்கும் நினைவேந்தல் நிகழ்வுகளை கஜேந்திரகுமார், கஜேந்திரன் தலைமையிலான அணியினர் குழப்புவதில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றனர் என்று யாழ். மாநகர சபை முன்னாள் முதல்வர் வி. மணிவண்ணன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

யாழ் . ஊடக அமையத்தில் நேற்று நடத்திய சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தியாக தீபம் திலீபனின் நினைவேந்தல் நினைவு வாரத்தில் நல்லூர் பின் வீதியில் தியாக தீபம் தொடர்பிலும், அவர் உண்ணாவிரதம் இருந்த நாட்களில் அவர்பட்ட வேதனைகளையும் ஆவணப்படுத்தி, ஆவண காட்சிகூடத்தை கடந்த இரு வருடங்களாக நடத்தி வருகிறோம்.

இம்முறை நாம் காட்சிக் கூடம் நடத்தும் மாநகர சபைக்குச் சொந்தமான காணியை எம்மை காட்சிக்கூடம் நடத்த விடாது தடுக்கும் முகமாக சைக்கிள் கட்சியினர் அந்த இடத்தை முன்பதிவு செய்துள்ளனர். அதனால் எமக்கான அனுமதி வழங்கப்படவில்லை.

எங்களுடைய நிகழ்வுகள் மிக உணர்வுபூர்வமாக அவ்விடத்தில் தியாக தீபத்தின் நினைவேந்தல் நிகழ்வுகளையும் மாவீரர் நிகழ்வுகளையும் குறித்த காணியில் நடத்தி வந்தோம். இந்நிலையிலையே அந்த காணியைத் தற்போது சைக்கிள் கட்சியினர் முன் பதிவுசெய்துள்ளனர்.

இவர்கள் அரச தரப்புடன் இணைந்து நினைவேந்தல் நிகழ்வுகளை நீர்த்துபோக செய்வதற்கு பல வருடங்களாக முயன்று வருகின்றனர். அதன் ஓர் அங்கமாகவே தியாக தீபத்தின் நினைவேந்தல் நிகழ்வுகளை நாங்கள் நடத்தக்கூடாது என்று அந்தக் காணியை முன்பதிவு செய்துள்ளனர் என்றார். (ஐ)

# சங்கானை பிரதேச செயலக நடமாடும் சேவை நாளை!

யாழ்ப்பாணம், செப். 15

யாழ். மாவட்ட செயலகமும் சங்கானை பிரதேச செயலகமும் இணைந்து நடத்தும் நடமாடும் சேவை நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரை பிரதேச செயலகத்தில் நடைபெற உள்ளது.

இந்த நடமாடும் சேவை முகாமில் ஆட்களை பதிவு செய்யும் திணைக்களத்தால் வழங்கப்படும் சேவைகள் (தேசிய அடையாள அட்டை) , ஓய்வூதியம் தொடர்பான சேவைகள், பிறப்பு - இறப்பு மற்றும் உத்தேச வயது சான்றிதழ் தொடர்பான சேவைகள், மோட்டார் வாகன பதிவு மற்றும் வாகன வருமான அனுமதி பத்திரம் தொடர்பான சேவைகள், பிரதேச சபையால் வழங்கப்படும் சேவைகள், பொலிஸ் திணைக்களத்தால் வழங்கப்படும் சேவைகள், மனித வள அபிவிருத்தி தொடர்பான சேவைகள் மற்றும் தொழில் வழிகாட்டல்கள் திறன் அபிவிருத்தி தொடர்பான சேவைகள் மற்றும் தொழில் கல்வி வழிகாட்டல்கள், சமூக சேவை பிரிவினரால் வழங்கப்படும் சேவைகள், முதியோர் தேசிய செயலகத்தினால் வழங்கப்படும் சேவைகள், காணி தொடர்பான சேவைகள், மருத்துவ முகாம் ,பொது மருத்துவ பரிசோதனை, கண்புரை பரிசோதனை, இலவச மூக்கு கண்ணாடி வழங்கும் சேவை (வறியவர்களுக்கு) என்பன நடைபெறவுள்ளன. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
15.09.2025 திங்கட்கிழமை
விசுவாவசு வருடம், ஆவணி 30

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## நேபாள நிலைமை இங்கும் ஏற்படுமா?

"இலங்கையின் வரலாற்றில் அனுபவமில்லாத ஆட்சி என்றால் அது அநுர குமார தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தான். எனவே, நேபாளத்தில் இடதுசாரி அரசாங்கம் விரட்டியடிக்கப்பட்டது போன்ற இளைஞர் கிளர்ச்சியொன்று இலங்கையிலும் ஏற்படலாம்", என்று பேராசிரியர் ரஞ்சித் தேவசிறி தெரிவித்திருக்கிறார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் என்பது ஆட்சியிலிருந்த கோட்டாபய ராஜபக்ஷவுக்கு எதிரான மக்கள் கிளர்ச்சியின் விளைவாகும். அவ்வாறானதோர் அரசாங்கத்துக்கு எதிராக பிறிதொரு கிளர்ச்சி ஏற்படுமாயின், அது முன்னரைப் போன்று இருக்காது. மிக மோசமான வன்முறைகளின் களமாக இருக்கும்.

ஆனால், அவ்வாறானதொரு நிலைமை ஏற்படக்கூடாது என்பதில்தான் அனைவரும் கவனமாக இருக்க வேண்டும். ஆட்சியைப் பங்குபோடும் மோதல்களில் கிளர்ச்சிக்கான விதைகள் செயற்கையாக ஏற்படுத்தப்படுமாக இருந்தால் அதன் விளைவுகளிலிருந்து இலங்கை பின்னர் மீளவே முடியாது போகலாம். ஏனெனில், அவ்வாறானதொரு வன்முறை கிளர்ச்சி இலங்கையில் ஏற்படுமாக இருந்தால் அது அண்டைநாடான இந்தியாவையும் பாதிக்கும். அப்போது இந்தியா சில விடயங்களின் அடிப்படையில் தலையீடு செய்ய வேண்டிய நிலையும் ஏற்படும்.

தேசிய மக்கள் சக்தியை குறிப்பாக, ஜே.வி.பியை விமர்சிக்க முற்படுபவர்கள் பயன்படுத்தும் ஒரு சொல் அனுபவமில்லாத அரசாங்கம் - ஆட்சியில் அவர்களுக்கு அனுபவமில்லை என்பது உண்மைதான். புதிதாக அதிகாரத்தைக் கையாள்பவர்களிடம் அனுபவத்தை எதிர்பார்க்க முடியாது என்பதும் உண்மை. ஆனால், அனுபவமுள்ளவர்கள் பலர் மேற்கொண்ட தவறான முடிவுகளாலும் - அதனால் ஏற்பட்ட பின்னடைவுகளாலும்தான் மக்கள் புதியவர்களை அதிகாரத்துக்குக் கொண்டு வருகின்றனர்.

இந்த அடிப்படையில்தான் கோட்டாபயவின் வீழ்ச்சி, அதனைத் தொடர்ந்து பாராளுமன்றத்தால் ஜனாதிபதியாகத் தெரிவான ரணில் விக்கிரமசிங்கவின் ஆட்சியிலும் ஏற்பட்ட அதிருப்தியின் விளைவாகவே மக்கள் அநுர குமார திஸநாயக்கவின் பின்னால் அணி திரண்டனர். அப்போதுகூட முழுமையாகத் திரளவில்லை. ஆனால், அடுத்த வந்த பாராளுமன்ற தேர்தலின்போது, வரலாற்றில் அரிதான பெரும்பான்மையை வழங்கினர். அதனைக் கொண்டு பல்வேறு விடயங்களை தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முன்னெடுக்க முடியும்.

பெரும்பான்மையைக் கொண்டு சில தீர்மானகரமான முடிவுகளை துணிகரமாக எடுத்தால் நாடு முன்னோக்கி நகரும் - ஒருவேளை அதில் தவறினால் நாடு மீண்டும் நெருக்கடிக்குள் விழும். ஆனால், இன்னொரு நெருக்கடிக்குள் விழுந்தால் நாட்டு மக்களால் அதனைத் தாங்கிக் கொள்ள முடியாது போகும்.

நேபாள இளைஞர்கள் வீதிக்கு வந்திருப்பதற்கு அரசாங்கத்தின் சமூக ஊடகங்களின் தடை ஒரு காரணியாகக் கூறப்பட்டாலும்கூட, அடிப்படையில் ஆட்சியாளர்களின் ஊழல் மற்றும் மோசமான அதிகார துஷ்பிரயோகங்களே இளைஞர்களை அரசாங்கத்துக்கு எதிராக அணிதிரட்டியிருக்கிறது. அத்துடன், அதற்கு பின்னால் வெளித் தலையீடுகளும் அவை ஏற்படுத்தியிருக்கும் தாக்கங்களும் ஒரு பிரதான காரணமாகும். ஆனால், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முக்கியமாக முன்னைய ஆட்சியாளர்களின் ஊழல் மற்றும் மோசடிகளையே பிரதான விடயமாக முன்வைத்திருக்கிறது. இது அடிப்படையில் மக்கள் மத்தியில் ஆதரவை பெற்றிருக்கிறது.

## "அரசியல் தலைவர்களுக்கு உயிர் அச்சுறுத்தல்"

கொழும்பு, செப். 15

சுதந்திரத்துக்கு பின்னரான இலங்கை அரசியல் வரலாற்றில் சகல ஆளும் எதிர்க்கட்சித் தலைவர்களும் அகால மரணமடைந்தவர்களாக அல்லது கொலை முயற்சியிலிருந்து தப்பியவர்களாகவே உள்ளனர். எனவே, எமது நாட்டின் அரசமைப்புக்கமைய ஜனாதிபதியின் பதவிக் காலத்துக்குப் பிறகு அவர்களின் வாழ்வு பாதுகாக்கப்பட வேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பில் ஐக்கிய தேசிய கட்சியின் தொகுதி அமைப்பாளர்களை நேற்று முன்தினம் சந்தித்த பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

"சமூகத்தில் வெறுப்பையும் விரோதத்தையும் உருவாக்குவது இலங்கைக்கு நன்மையளிக்காது. ஜனநாயக நாடுகள் என்றும் முன்னோக்கியே பயணித்திருக்கின்றன. நேபாளம் போன்ற நாடுகள் இந்த வரலாறுகளை கற்றால் தற்போதைய நிலைமைக்கு உகந்ததாக இருக்கும். இலங்கையில் அரசியல் கலவரம் வெடித்த போது முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக பதவி வகித்தார்.

அவரது வீட்டுக்குத் தீ வைக்கப்பட்ட போதிலும் அவர் பயந்து ஓடவில்லை. மாறாக ஏனையோரது வீடுகள் எரிக்கப்படுவதை தடுப்பதற்கு நடவடிக்கை எடுத்தார். ஆனால், நேபாள பிரதமர் அந்த சந்தர்ப்பத்தில் தப்பிச் சென்றதாலேயே ஏனையோர் பாதிக்கப்பட்டனர் என்பதே எனது நிலைப்பாடாகும். எனவே, தேசியத் தலைவர் என்ற ரீதியில் முன்னாள் ஜனாதிபதி ரணிலுக்கு அந்த கௌரவம் வழங்கப்பட வேண்டும்" - என்றார். (எ)

## நீண்டதூர பஸ்களுக்கு கட்டாய அடிப்படை தர பரிசோதனை

கொழும்பு, செப். 15

நீண்ட தூரம் சேவையில் ஈடுபடும் பேருந்துகள் அனைத்தையும் பயணத்துக்கு முன் கட்டாய அடிப்படை தர பரிசோதனைக்கு உட்படுத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இந்தத் திட்டம் ஒக்ரோபர் மாதம் முதல் அமுலாகவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக, கொழும்பு பெஸ்டியன் மாவத்தை மற்றும் மாகும்புர பல்நோக்கு போக்குவரத்து மையத்தில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் மேற்பார்வையில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்படவுள்ளது.

நீண்ட தூர சுற்றுலா பேருந்துகளும் இந்தப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும், இல்லையெனில் அவை அங்கீகரிக்கப்படாது.

100 கிலோ மீற்றருக்கு மேல் பயணிக்கும் பேருந்துகள், பயணத்துக்கு 48 மணி நேரத்துக்கு முன் தகுதிச் சான்றிதழ் பெற வேண்டும்.

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் இதற்கான வழிமுறைகளை சுற்றறிக்கை மூலம் வெளியிட நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

நாடு முழுவதும் இந்தத் திட்டத்தை விரிவாக்க, மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் வாகன பழுது பார்க்கும் இடங்களை ஆய்வு செய்து, தகுதிச் சான்றிதழ் வழங்குவதற்கு அதிகாரமளிக்க நடவடிக்கை எடுக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. (எ)

## 3 பொலிஸ் அதிகாரிகளுக்கு 7 வருடங்கள் கடூழிய சிறை!

பொலநறுவை, செப். 15

பொலநறுவையில் 2004ஆம் ஆண்டு ஹோட்டல் முகாமையாளர் ஒருவர் தாக்கப்பட்டு உயிரிழந்த சம்பவம் தொடர்பில் மூன்று பொலிஸாருக்கு பொலநறுவை மேல் நீதிமன்ற நீதிபதி ஏழு ஆண்டுகள் கடூழியச் சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்தார்.

2004 இல், பொலநறுவை மாவட்ட போதை ஒழிப்பு பொலிஸ் பிரிவைச் சேர்ந்த நான்கு பொலிஸார், பொலிஸ் பரிசோதகர் ஒருவர் தலைமையில் சட்டவிரோத மது பானம் தேடி ஹோட்டல் ஒன்றில் சோதனை நடத்தினர்.


இதன்போது ஹோட்டல் முகாமையாளருக்கும் பொலிஸாருக்கும் இடையே வாக்குவாதம் ஏற்பட்டு பொலிஸார் அவரைத் தாக்கியதில் முகாமையாளர் உயிரிழந்தார்.

இதையடுத்து, நான்கு பொலிஸாரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இந்த வழங்கு மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, ஒருவர் உயிரிழந்த நிலையில் மூன்று பொலிஸார் மன்றில் ஆஜராகினர்.

சாட்சிகள் மற்றும் ஆதாரங்களின் அடிப்படையில் அவர்கள் குற்றவாளிகளாகக் கண்டறியப்பட்டு, ஏழு ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. (எ)


## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு






**மேடம்**
குடும்பத்தில் ஒற்றுமை பிறக்கும். எதிர்பார்த்திருந்த தொகை கைக்கு வரும். புது நட்பு மலரும். நீண்ட நாட்களாக தள்ளிப் போன காரியங்கள் இன்று முடியும்.

**இடபம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் திடீர் திடீரென்று எதையோ இழந்ததைப் போல் இருப்பீர்கள். சிலரின் தவறுகளை சுட்டிக் காட்டுவதன் மூலம் சச்சரவுகளில் சிக்குவீர்கள்.

**மிதுனம்**
கணவன்-மனைவிக்குள் மனஸ்தாபம் வந்து நீங்கும். எதிர்பார்த்த உதவிகள் தாமதமாகக் கிடைக்கும். சாலைகளை கவனமாக கடந்துச் செல்லுங்கள். அதிகம் உழைக்க வேண்டிய நாள்.

**கடகம்**
எதையும் சமாளிக்கும் மனப்பக்குவம் கிடைக்கும். பெற்றோரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். விசேஷங்களை முன்னின்று நடத்துவீர்கள். காணாமல் போன முக்கிய ஆவணங்கள் கிடைக்கும்.

**சிம்மம்**
உறவினர் நண்பர்களின் வருகையால் உற்சாகம் அடைவீர்கள். உங்களின் இலக்கை நோக்கி முன்னேறுவீர்கள். உங்களால் பயனடைந்தவர்கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள்.

**கன்னி**
கணவன்-மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். திடீர் முடிவுகள் எடுப்பீர்கள். புண்ணிய தலங்கள் சென்று வருவீர்கள். சிலர் உங்களை நம்பி முக்கிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள்.

**துலாம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் கொஞ்சம் அலைச்சலும் சிறுசிறு ஏமாற்றமும் வந்து நீங்கும். அடுத்தவர்களை குறைக் கூறிக் கொண்டிருக்காமல் உங்களை மாற்றிக்கொள்ளப் பாருங்கள்.

**விருட்சிகம்**
பிள்ளைகள் உங்கள் அறிவுரையை ஏற்றுக் கொள்வார்கள். விலை உயர்ந்தப் பொருட்கள் வாங்குவீர்கள். மனைவி வழியில் நல்ல செய்தி வரும். தாயாரின் உடல்நிலை சீராகும்.

**தனுசு**
பணப்புழக்கம் அதிகரிக்கும். உறவினர்கள் நண்பர்கள் உங்களை கலந்தாலோசித்து சில முடிவுகள் எடுப்பார்கள். நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவர் உங்களை தேடி வருவார்.

**மகரம்**
குடும்ப வருமானத்தை உயர்த்த புது முயற்சிகளை மேற்கொள்வீர்கள். பிள்ளைகளால் புகழ் கௌரவம் உயரும். குலதெய்வப் பிரார்த்தனையை நிறைவேற்றுவீர்கள். கனவு நனவாகும் நாள்.

**கும்பம்**
பால்ய நண்பர்கள் உதவுவார்கள். தாயாருடன் கருத்து மோதல்கள் வந்து நீங்கும். யோகா தியானத்தில் மனம் செல்லும். கலைப் பொருட்கள் வாங்குவீர்கள். உயர்வு பெறும் நாள்.

**மீனம்**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். உடன்பிறந்தவர்கள் உங்கள் நலனில் அதிக அக்கறை காட்டுவார்கள். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள்.

# அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அரசாங்கத்துக்கு முக்கியமில்லை

## எதிர்க்கட்சி தலைவர் சஜித் சாடல்

கொழும்பு, செப். 15

அரசாங்கத்துக்கு ஆசிரியர்களாக பணியாற்றிய அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தற்போது முக்கியமில்லை என்றாலும், இலவசக் கல்விக்காக இவர்கள் செய்த பணிகளை எம்மால் மறக்க முடியாது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

அநீதிக்குள்ளாகியுள்ள 16,600 ஆசிரியர்களாக பணியாற்றிய அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் உரிமைகளுக்காக தான் முன்நிற்பதாகவும், இந்த பிரச்னையை பாராளுமன்றத்துக்கு கொண்டு வந்தபோது, இது தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னை அல்ல என அரசாங்கம் கூறியது.

கடந்த அரசாங்கம் 2020 ஆம் ஆண்டில் 53,000 பட்டதாரிகளை வேலைக்கு அமர்த்தி, அவர்களில் 22,000 பேரை இலவசக் கல்வியை வலுப்படுத்த ஆசிரியர்களாக உள்ளீர்த்தது. கோவிட்-19 தொற்றுநோயின் சிரமங்களுக்கு மத்தியில் இவர்கள் சிறந்த சேவைகளை முன்னெடுத்திருந்தாலும் அதிகபட்ச வேலைகளை வாங்கிய பின்னர் அரசாங்கம் தற்போது அவர்களை கைவிட்டுள்ளதாகவும் 5 ஆண்டுகளுக்கு மேல் அனுபவம் இருந்தாலும், நேரடியாக இணைத்துக் கொள்ளாது, சாதாரண முறைமையின் ஊடாக ஆசிரியர் சேவையில் இணையுமாறு அரசாங்கம் கூறிவருகிறது என்று சஜித் தெரிவித்தார்.

கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்துக்கு அருகில் நேற்று முன்தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட ஆசிரியர்களாக பணியாற்றி வந்த அபிவிருத்தி உத்தியோகத்தர்களை நேரில் சந்திக்க சென்ற போதே சஜித் இவ்வாறு தெரிவித்தார்.

இவர்களுக்கு அநீதி இழைக்கப்படுகிறது. அரசியல் ரீதியாக இலாபம் அடைந்த பின்னர் அரசாங்கம் இவர்களை ஓரம் கட்டி விட்டது.

இவர்களுக்காக இன்றும் எதிர்காலத்திலும் ஐக்கிய மக்கள் சக்தி முன்நிற் கும். பிரதமரின் அமைச்சரவைக் குறிப்பின்படி, இளங்கலைப் பட்டம் அடிப்படைத் தகுதியாக உள்ள பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களின் எண்ணிக்கையைக் கருத்தில் கொண்டு, 50,000 வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பு செய்ய முடியும் என்று கூறப்பட்டுள்ளது. எனவே, தயவுசெய்து இவர்களுக்கு தொழில்களை வழங்கு மாறும், கடமை, நீதி மற்றும் நியாயத்தை நிறைவேற்றுமா றும் எதிர்க்கட்சித் தலைவர் கூறினார். (எ)

# மணல் கடத்தலை தடுப்பதற்கு முயற்சித்தவர்களுக்கு மிரட்டல்

## கற்கோவளத்தில் வாடிகளுக்கு தீ வைத்து அராஜகம்

யாழ்ப்பாணம், செப். 15

சட்டவிரோத மணல் கடத்தலை தடுக்க முயற்சித்த காரணத்தால் கற்கோவளத்தில் மீனவ வாடிகள் அடித்துடைக்கப்பட்டு தீவைக்கப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மணல் கடத்தல் காரர்களால் மேற்கொள்ளப்பட்ட வெறியாட்டத்தில் மீனவர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும் ஒரு மீனவர் காயமடைந்துள்ளார். கடந்த வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற இந்தச்சம்பவத்தில் அதே இடத்தை சேர்ந்த இரு பிள்ளைகளின் தந்தையான வ. வசந்தகுமார் (வயது-30) என்பவர் பலத்த காயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் அனைவரையும் கைது செய்யும் வரை கடற்றொழில் மறிப்பு போராட்டத்தை குறித்த பகுதி மீனவர்கள் முன்னெடுத்திருந்தனர்.

இச்சம்பவத்தை அடுத்து பாதிக்கப்பட்ட மீனவர்கள் மற்றும் பிரதேச மக்கள் இணைந்து சட்டவிரோத மணல் கடத்தல் செயல்பாட்டை உடனடியாக நிறுத்த நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும் சந்தேக நபர்களை கைது செய்யுமாறு வலியுறுத்தியும் தமது பாதுகாப்பை உறுதிப்படுத்தக்கோரியும் போராட்டத்தில் ஈடுபட்டனர். (அ-எ)

# ஆரம்ப விழா

வவுனியா, செப். 15

வவுனியா பல்கலைக்கழகத்தின் தொலைதூர மற்றும் தொடர் கல்விக்கான நிலையத்தின் ஊடாக நடத்தப்படும் ஆரம்பப் பிள்ளைப்பருவ கல்வி டிப்ளோமா கற்கைநெறி - பிரிவு இன் ஆரம்ப விழா வவுனியா பல்கலைக்கழகத்தில் நடைபெற்றது.

இதில், சிறப்பு விருந்தினர்களாக வவுனியா பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் ஏ. அற்புதராஜா, தொலைதூர மற்றும் தொடர்கல்விக்கான நிலையத்தின் பணிப்பாளர் ஏ. ஜூட் லியோன், கல்வி மேம்பாட்டு கூட்டமைப்பின் தலைவர் எம். சூரியசேகரம், வவுனியா வடக்கு உதவிக்கல்வி பணிப்பாளர் (முன்பள்ளி) எம். முரளிதரன், பாட ஒருங் கிணைப்பாளர் எஸ். சண்முகதா சன் மற்றும் தொலைதூர மற்றும் தொடர்கல்விக்கான நிலை யத்தின் உதவிப் பதிவாளர் யூ.விதுஷனா ஆகியோர் கலந்து கொண்டனர். (எ-10)

# ஒருவருடம் பூர்த்தியாகிறது எதையும் சாதிக்கவில்லை

## அரசாங்கம் மீது அதிருப்தி

யாழ்ப்பாணம், செப். 15

அநுர அரசாங்கம் பதவியேற்று எதிர்வரும் 24 ஆம் திகதியுடன் ஒரு வருடம் பூர்த்தியாகின்றது. ஆனால், எதையும் சாதிக்கவில்லை என்று புதிய ஜனநாயக மார்க்சிய லெனினிச கட்சியின் பொதுச்செயலாளர் சி. கா. செந்தில்வேல் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் கொக்குவில் பகுதியில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், இந்த அரசாங்கம் பதவியேற்று எதிர்வரும் 24 ஆம் திகதியுடன் ஒரு வருடம் பூர்த்தியாகின்றது. ஆனால், இதுவரை அரசாங்கம் எதையும் சாதிக்கவில்லை. கடந்த கால அரசாங்கங்களை விமர்சித்து ஆட்சிக்கு வந்த அநுர அரசாங்கம் பொருளாதாரத்தில




பாதிக்கப்பட்ட மக்களுக்கு எதையும் செய்யவில்லை. கடந்த காலங்களில் இந்தியாவை விமர்சித்து வந்த அநுர, இந்தியாவின் நலன்களுக்காகவே செயல்படுகின்றார். தொடர்ந்தும் சர்வதேச நாணய நிதியத்தை நம்பி இந்த அரசாங்கம் ஓடுகின்றது. இறக்குமதி பொருளாதாரத்தை இந்த அரசாங்கம் நம்பியுள்ளதுடன் இந்த நாட்டில் உற்பத்தியை அதிகரிப்பதற்கான எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. இறக்குமதி பொருளாதாரத்தையே இந்த அரசாங்கமும் நம்பியுள்ளது- என்றார். (எ- 03)

# பாதுகாப்பு பிரதியமைச்சரிடம் விசாரணை நடத்த வேண்டும்

யாழ்ப்பாணம், செப். 15

இலங்கையில் யுத்தக் குற்றங்கள் நடைபெறவில்லை என பாதுகாப்பு பிரதியமைச்சர் அருண ஜயசேகர கூறியதற்கு பதிலளித்த ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், அவரிடம் விசாரணை நடத்தினால் யுத்தக் குற்றங்களில் அவரது பங்கு தெரியவரும் எனவும் கூறினார்.

செம்மணி மனிதப் புதைகுழி, பாதுகாப்பு வலயங்களில் மக்கள் மீது நடத்தப்பட்ட மோட்டார் குண்டுத் தாக்குதல்கள் உள்ளிட்டவை யுத்தக் குற்றங்கள் என சுரேஷ் சுட்டிக்காட்டினார்.

அருண ஜயசேகர, முன்னாள் இராணுவ வீரர் என்பதால் முப்படைகளைப் பாதுகாக்கும் நோக்கில் இவ்வாறு பேசுவதாகவும், உள்ளக விசாரணைகள் மூலம் தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்காது.- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சி. ஐ. டி. விசாரணை வளையத்துக்குள் மகிந்தவின் முன்னாள் செயலர் லலித்!

கொழும்பு, செப். 15

மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தபோது அவரின் செயலாளராகப் பணியாற்றிய லலித் வீரதுங்கவிடம் குற்றப் புலனாய்வுத் துறை வாக்கு மூலம் பதிவு செய்யவுள்ளது.

விளையாட்டு அமைச்சுக்காக வரி இல்லாமல் இறக்குமதி செய்யப்பட்ட பேருந்து கார்லடன் சிறுவர் பாடசாலைக்கு வழங்கப்பட்டதாக எழுந்த குற்றச்சாட்டு தொடர்பாக இந்த வாக்குமூலம் பதிவுசெய்யப்படவுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டை விசாரித்து வரும் குற்றப் புலனாய்வுத் துறையின் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணையை தொடங்கியுள்ளது.

குறித்த காலப்பகுதியில் ஜனாதிபதி செயலகத்தின் கூடுதல் செயலாளராக இருந்தவரிடமும் விசாரணை நடத்தப்படவுள்ளது.

'சிரிலிய' திட்டம் குறித்து குற்றப் புலனாய்வுத் துறை நடத்தும் விசாரணையின் ஒரு பகுதியாக இந்த விசாரணைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

'சிரிலிய' கணக்கு தொடர்பான 7 முறைகேடுகள் குறித்து குற்றப் புலனாய்வுத் துறை மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றத்தில் அறிக்கை அளித்திருந்தது.

இது தொடர்பாக சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெற நீதிமன்றம் குற்றப் புலனாய்வுத் துறைக்கு உத்தரவிட்டிருந்தது. 7 வழக்குகளில் 6 இற்கு குற்றச்சாட்டுகளைப் பதிவு செய்யப் போதுமான ஆதாரங்கள் இல்லை என்று சட்டமா அதிபர் துறை பின்னர் குற்றப் புலனாய்வுத் துறைக்கு தெரிவித்தது.

இருப்பினும், பேருந்து தொடர்பாக புதிய ஆதாரங்கள் வெளிவந்துள்ள நிலையில், குற்றப் புலனாய்வுத் துறையினர் நீதிமன்றத்தில் புதிய ஆதாரங்களை சமர்ப்பித்து விசாரணையை மீண்டும் தொடங்கியுள்ளனர். (ஐ)

# அரிசி தொடர்பான மோசடிகள்; 900 பேருக்கு எதிராக வழக்கு!

கொழும்பு, செப். 15

அதிக விலைக்கு அரிசி விற்பனை, நுகர்வுக்கு பொருந்தாத அரிசி விற்பனை, பதுக்கி வைத்தமை தொடர்பில் 3 ஆயிரம் சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.

இதில், 900இற்கும் அதிகமானோருக்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன என்று நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதிக விலைக்கு அரிசி விற்பனை செய்யும் ஒரு தனிப்பட்ட வர்த்தகருக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டால், அவருக்கு ஒரு இலட்சம் ரூபாய் முதல் 5 இலட்சம் ரூபாய் வரை அபராதம், அல்லது 5 மாத சிறைத்தண்டனை அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.

இதேநேரம், ஒரு தனியார் நிறுவனம் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால், நீதிமன்றம் 5 இலட்சம் ரூபாய் முதல் 50 இலட்சம் ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படலாம்.

மேலும், அரிசி சேமிப்பு தொடர்பான குற்றத்துக்காக நீதிமன்றத்தால் குற்றவாளி என நிரூபிக்கப்பட்டால், அதிகார சபை சட்டத்தின் கீழ் தொடர்புடைய பொருட்களை பறிமுதல் செய்யலாம்.

அத்துடன், இரண் டாவது குற்றத்தில், நீதிமன்றம் குறைந்த பட்ச அபராதத்தின் இரு மடங்கு அபராதம் விதிக்க லாம் மற்றும் அந்த நபருக்கு ஒரு வருடம் வரை சிறைத் தண்டனை விதிக்கலாம் என்றும் நுகர்வோர் விவகார அதிகார சபை தெரிவித்துள்ளது. (ஐ)

# இரட்டை கொலை; சந்தேகநபர் கைது

கொழும்பு, செப். 15

கரந்தெனிய இரட்டைக் கொலை சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட் டுள்ளார்.

கைதானவரிடமிருந்து உள்நாட்டு தயாரிப்பான கைக் குண்டு ஒன்றும் கைப்பற்றப்பட்டது.

கைதான சந்தேக நபர் கரந்தெனியவைச் சேர்ந்த 44 வயதுடையவராவார்.

காலி - கரந்தெனியவில் கடந்த 11ஆம் திகதி தாயும் மகனும் கூரிய ஆயுதத்தால் தாக்கப்பட்டு கொல்லப்பட்ட சம்பவத்துடனேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார். (ஐ)

# வட்ஸ் அப் மூலம் 7 ஆயிரம் முறைப்பாடுகள்!

கொழும்பு, செப். 15

பொலிஸ் தலைமையகத்தின் நேரடி வடஸ் அப் இலக்கத்துக்கு இதுவரை 7 ஆயிரம் முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

இவற்றில், பொலிஸ் திணைக்களம் தொடர்பான முறைப்பாடுகள் குறித்த விசாரணைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

எனினும், சில முறைப்பாடுகள் பொலிஸாருடன் தொடர்புடையவை அல்ல என்றும் பொலிஸ் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும், குற்றங்கள் - மற்றும் பிரச்னைகள் தொடர்பில் பொதுமக்கள் பொலிஸ் தலைமையகத்துக்கு முறைப்பாடளிக்க வசதியாக அண்மையில் 071 8598 888 என்ற வட்ஸ்அப் இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டது தெரிந்ததே. (ஐ)

# ரூ. 8.5 கோடி பெறுமதியான போதைப்பொருள் சிக்கியது

## - இந்தியர் ஒருவர் கைது -

கொழும்பு, செப். 15

பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் 8.5 கோடி ரூபாய் பெறுமதியான போதைப்பொருளுடன் இந்திய பிரஜை ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தியாவின் - மதுரைக்கு பயணிக்க வந்தவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

அவரின் பயணப் பையில் 8 கிலோ 542 கிராம் குஷ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கைதானவர் சென்னையை சேர்ந்த 33 வயதான நபராவார். சட்ட நடவடிக்கைக்காக அவர் நீர் கொழும்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (ஐ)

# மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணம் நாளை மறுதினம் ஆரம்பம்!



கொழும்பு, செப். 15

பொருளாதார நெருக்கடியைத் தொடர்ந்து இடைநிறுத்தப்பட்டுள்ள கடவத்தை - மீரிகம இடையிலான மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாண பணிகள் நாளை மறுதினம் மீள ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்தப் பணிகள் ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க தலைமையில் நடைபெறவுள்ளது.

அதிவேக நெடுஞ்சாலையின் நிர்மாணப் பணிகளை மீண்டும் ஆரம்பிக்க சீனாவின் ஏற்றுமதி - இறக்குமதி வங்கியிடமிருந்து 50 கோடி அமெரிக்க டொலர் கடன் பெறப்பட்டுள்ளது என்று போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் பிரசன்ன குமார குணசேன தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டம் 2028 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் நிறைவுசெய்ய திட்டமிடப்பட்டுள்ளது. மத்திய அதிவேக நெடுஞ்சாலையின் இந்தப் பகுதியில் கடவத்தைக்கும் மீரிகமவுக்கும் இடையிலான தூரம் 37 கிலோமீற்றர் ஆகும். (ஐ)

# மருதானை ரயில் நிலையத்தின் புதுப்பித்தல் பணிகள் ஆரம்பம்

கொழும்பு, செப். 15

கொழும்பு, மருதானை ரயில் நிலையத்தின் புதுப்பித்தல் பணிகள் இன்று 15 ஆம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

புதுப்பித்தல் நடவடிக்கையினூடாக, ரயில் நிலையத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகள் நவீனமயமாக்கப்படும்.

கொழும்பு நகரின் இரண்டாவது பெரிய ரயில் நிலையமாக மருதானை கருதப்படுகிறது. (எ)

# கொழும்பு பேருந்து நிலையத்தை புதுப்பிப்பிக்க ரூ. 42.4 கோடி தேவை

கொழும்பு, செப். 15

60 வருடங்களுக்கு பின்னர் புனரமைக்கப்படும் கொழும்பு - புறக்கோட்டை மத்திய பேருந்து நிலையத்தை புதுப்பிக்க 42.4 கோடி ரூபாய் தேவை என்றுமதிப்பிடப்பட்டுள்ளது.

புறக்கோட்டைக்கு வருகை தரும் மக்களுக்காக புறக்கோட்டை மத்திய பேருந்து நிலையம் 1964 ஆம் ஆண்டு கட்டப்பட்டது.

தற்போது, இங்கிருந்து நாளாந்தம் 1,500 இற்கும் மேற்பட்ட பேருந்து வழித்தடங்கள் இயக்கப்படுகின்றன.

தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் பயன்படுத்தும் பேருந்து நிலையம், பல தசாப்தங்களாக முறையான பராமரிப்பு இல்லாததால் பழுதடைந்து காணப்பட்டது.

இதற்கு தீர்வு காணும் நோக்கில், நாட்டில் 50 பேருந்து நிலையங்களை நவீனமயமாக்கும் திட்டத்தை தொடங்க அரசாங்கம்நடவடிக்கை எடுத்துள்ளது.

இதன்படி, மத்திய பேருந்து நிலையத்தை நவீனமயமாக்கும் திட்டம் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகிறது.

விமானப்படை தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி பேருந்து நிலையம் புதுப்பிக்கப்படவுள்ளது.

புதிய திட்டத்தின் கீழ், பேருந்து நிலையத்தில் புதிய கழிப்பறைகள், தகவல் மற்றும் தகவல் தொடர்பு நிலையங்கள் மற்றும் பாதுகாப்பு அமைப்புகள் நிறுவப்பட உள்ளன. புதுப்பிப்பு பணிகளுக்கு தயாராகும் வகையில் பேருந்து நிலையத்தில் பேருந்து சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன. (ஐ)

# அஞ்சல் சேவையின் வளர்ச்சிக்கு ரூ. 208 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது

## அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ



கொழும்பு, செப். 15

நாட்டின் அஞ்சல் சேவையின் எதிர்கால வளர்ச்சிக்காக இந்த ஆண்டு 208. 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக அஞ்சல் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்துள்ளார்.

மேலும், தபால் சேவையை நவீனமயமாக்க இந்த ஆண்டு 208. 5 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

அஞ்சல் துறைக்குத் தேவையான பாரவூர்திகள் வாங்குவதற்கு ரூ. 25 கோடி, வாடகை வண்டிகளை பெறுவதற்கு ரூ.32 கோடி, துணை அஞ்சல் அலுவலகங்களுக்கு நவீன தொழில்நுட்பத்தைச் சேர்க்கத் தேவையான 1500 கை கணினிகள் (ரப்) வாங்குவதற்கு ரூ.18 கோடி, 225 கணினிகள் வாங்குவதற்கு ரூ.7.5 கோடி, தபால் நிலையங்களுக்கு புதுப்பிக்கத்தக்க சூரிய சக்தியை வழங்குவதற்கு ரூ. 4 கோடி ஒதுக்கப்பட்டுள்ளன.

புதிய அஞ்சல் பணிமனைகள் கட்டுவதற்கு ரூ. 60 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இதன்படி 20 புதிய அஞ்சல் பணிமனைகள் கட்ட எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், தபால் நிலையங்களை நவீனமயமாக்க 60 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. கண்டி மற்றும் நுவரெலியாவில் உள்ள வரலாற்று சிறப்புமிக்க தபால் நிலையங்கள் உட்பட 209 தபால் நிலையங்களை நவீனமயமாக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் - என்று காலி - பலப்பிட்டி தபால் நிலைய கட்டடத்துக்கு அடிக்கல் நாட்டும் நிகழ்வில் அமைச்சர் தெரிவித்தார். (ஐ)

# இம்மாதத்தின் முதல் 10 நாட்களில் 52, 246 சுற்றுலா பயணிகள் வருகை

கொழும்பு, செப். 15

2025 ஆம் ஆண்டின் செப்ரெம்பர் மாதத்தின் முதல் 10 நாட்களில் 52 ஆயிரத்து 246 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இம் மாதத்தின் முதல் 7 நாட்களில் அதிகளவான சுற்றுலாப் பயணிகள் இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள நிலையில் அவர்களின் மொத்த எண்ணிக்கை 14 ஆயிரத்து 300 ஆகும்.

அத்துடன், ஐக்கிய இராஜ்ஜியத்திலிருந்து 4,092 பேரும் ஜேர்மனியிலிருந்து 3,488 பேரும் சீனாவிலிருந்து 2,796 பேரும் அவுஸ்திரேலியாவிலிருந்து 2,603 பேரும் நெதர்லாந்திலிருந்து 1,984 பேரும் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

இதன்படி, 2025 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் முதலாம் திகதியிலிருந்து செப்ரெம்பர் மாதம் 10 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்குள் 16 இலட்சத்து 18 ஆயிரத்து 769 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை மேலும் தெரிவித்துள்ளது. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் நலன்சார் விடயங்களில் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு

## சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு

மட்டக்களப்பு, செப். 15

ஊழல் ஒழிப்பு மற்றும் மக்கள் நலன்சார் விடயங்களில் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்கப்படும் என்று இலங்கை தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகளை குறைக்கும் சட்ட மூலத்துக்கு தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற குழு வாக்களிக்க வேண்டியதில்லை என அந்தக் கட்சியின் பாராளுமன்ற குழு தலைவர் தீர்மானித்ததாகவும் மட்டக்களப்பு ஊடக அமையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகச் சந்திப்பில் கூறினார்.

இதேவேளை, எதிர்காலத்தில் இத்தகைய தீர்மானங்கள் கட்சி மட்டத்தில் எடுக்கப்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

ஜனாதிபதியுடனான சமீபத்திய சந்திப்பில் மாகாண சபை தேர்தல், வடக்கு - கிழக்கு அபிவிருத்தி நிதியம் மற்றும் மாவட்ட பிரச்னைகள் குறித்து விவாதித்ததாகவும் ஆனால் இது உத்தியோகபூர்வ சந்திப்பு இல்லை எனவும் கூறினார்.

மாகாண சபை தேர்தல் தொடர்பில் எல்லை நிர்ணயம் மற்றும் விகிதாசார முறை குறித்து அரசாங்கத்தில் குழப்பம் உள்ளது. ஜனாதிபதி இது தொடர்பில் பதிவு செய்யப்பட்ட கட்சிகளுடன் கலந்துரையாடி முடிவெடுக்க வேண்டும்.

அபிவிருத்தி நிதியம் உருவாக்குவது குறித்து முன்னர் பேசப்பட்ட போதிலும் முன்னேற்றம் இல்லை. மாவட்டத்தில் நிலவும் நிர்வாக மற்றும் தீர்க்கப்படாத பிரச்னைகள் குறித்து ஜனாதிபதியிடம் எடுத்துரைத்துள்ளேன்.

முன்னாள் ஜனாதிபதிகளின் சலுகைகளை குறைக்கும் சட்டமூலத்தை மக்கள் நலன் சார்ந்ததாக கருதி ஆதரித்திருக்க வேண்டும். தமிழ் அரசு கட்சியின் பாராளுமன்ற குழு இதற்கு ஆதரவாக வாக்களிக்காதது தவறான முடிவு. இதற்காக மக்களிடம் வருத்தம் தெரிவிப்பதாகவும் சாணக்கியன் கூறினார்.

அத்தோடு, எதிர்காலத்தில் இத்தகைய மக்கள் நலன் சார்ந்த சட்டமூலங்களுக்கு கட்சி ஆதரவு வழங்க வேண்டும். ஊழல் ஒழிப்பு மற்றும் மக்கள் நலன் சார் விடயங்களில் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் அவர் உறுதியளித்தார். (எ)

# 4 பேரை சுட்டுக் கொன்ற முன்னாள் சிப்பாய் கைது

## அம்பாறையில் மறைந்திருந்தபோது மாட்டினார்

கல்முனை, செப். 15

பண்டாரகமவில் முன்னாள் சிறைச்சாலை அதிகாரி ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் உள்ளிட்ட நான்கு கொலைகளுடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் முன்னாள் இராணுவச் சிப்பாய் ஒருவர், பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் மட்டும் இந்த சந்தேக நபர் நான்கு பேரை சுட்டுக்கொன்றதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

ஓகஸ்ட் 7 ஆம் திகதி, பொரளையில் உள்ள சிறிசர உயன பகுதியில் இரண்டு இளைஞர்களை சுட்டுக் கொன்ற துப்பாக்கிதாரி, அம்பாறையில் உள்ள சியம்பலாண்டுவ பகுதியில் பதுங்கியிருப்பதாக பொலிஸ் விசேட அதிரடிப்படையின் ஜயவர்த்தனபுர முகாமின் கூட்டு விசேட சுற்றிவளைப்புப் பிரிவுக்கு தகவல் கிடைத்தது.

இதன்படி, குறித்த நபர் அந்தப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.சந்தேக நபரிடம் மேற் கொள்ளப்பட்ட விசாரணைக ளில் ஓகஸ்ட் 21 ஆம் திகதி பண் டாரகம, துன்போதிய பாலத்துக்கு அருகில் முன்னாள் சிறைச்சாலை அதிகாரி லலித் கோடகொட சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தில் அவரே துப்பாக்கிதாரி என்பது உறுதியானது.

மேலும், ஓகஸ்ட் 27 ஆம் திகதி பாணந்துறை தெற்கு, அலுபோகஹவத்த பகுதியில் குடு நிலங்கவின் மாமனார் கொலை செய்யப்பட்ட சம்ப வத்திலும் இவர் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக சந்தேகிக் கப்படுகிறார்.

மூன்று துப்பாக்கிச் சூடுகளும் ரி-56 துப்பாக்கிகளைப் பயன்படுத்தி நடத்தப்பட்டன. இந்த மூன்று சம்பவங்களில் நான்கு பேர் உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டபோது, சந்தேக நபரிடம் 10 கிராமுக்கும் அதிகமான ஐஸ் போதைப் பொருள் கண்டுபிடிக்கப்பட்டது.

2015 ஆம் ஆண்டு இராணுவ சேவையிலிருந்து தப்பியோடியவரான இந்த சந்தேக நபர், குற்றவாளிகளான குடு சலிந்து, தெஹிபாலே ஐயா, தெஹிபாலே மல்லி மற்றும் வெலிகம சஹான் ஆகியோருடன் நெருங்கிய தொடர்புகளைக் கொண்டிருந்ததாகவும் அவர்களுக்கு கூலிப்படையாக செயல்பட்டிருக்கலாம் என்றும் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (எ)

# மட்டு. புதுக்குடியிருப்பு பகுதியில் காட்டு யானைகள் அட்டகாசம்!

மட்டக்களப்பு, செப். 15

மட்டக்களப்பு வாவியை ஊடறுத்து எழுவாங்கரைப் பகுதியிலுள்ள புதுக்குடியிருப்பு பிரதேசத்துக்குள் இரவு வேளையில் உள்நுழைந்த காட்டு யானைகள் வேலிகளை உடைத்து சேதப்படுத்தியும் பயன் தரும் வாழை, கரும்பு மற்றும் விவசாய தோட்டங்களை துவம்சம் செய்துள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இதுவரை காலமும் மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரைப் பகுதியிலேயே காட்டு யானைகளின் அச்சுறுத்தல்கள் காணப்பட்டன. இந்த நிலையில் தற்போது, காட்டு யானைகள் மட்டக்களப்பு வாவியை ஊடறுத்து எழுவான்கரைப் பகுதிக்கு உள் நுழைந்துள்ளதனால் அங்குள்ள மக்களும் அச்சத்தின் மத்தியில் தமது வாழ்க்கை கழிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக கவலை வெளியிட்டுள்ளனர்.

அண்மைக்காலமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் காட்டு யானைகளின் தாக்குதலுக்குள்ளாகி உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதோடு மக்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டு வருகின்றன.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு திசைமாறி மண்டூர் பகுதியிலிருந்து வெல்லாவெளி ஊடாக புதுக்குடியிருப்பு பகுதிக்குள் நான்கு காட்டு யானைகளும் ஊடுருவியிருக்கலாம் என மக்கள் கூறினர். எனினும், அப்பகுதிக்கு விரைந்த வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகளும் இளைஞர்களும் இணைந்து காட்டு யானைகளை மீண்டும் மட்டக்களப்பு வாவியை ஊடறுத்து படுவான் கரைப் பகுதிக்கு அனுப்புவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். (எ)

# பாலமுனை வீதி புனரமைப்பு

கல்முனை, செப். 15

அரசாங்கத்தின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் 9. 5 மில்லியன் ரூபாய் செலவில் அம்பாறை மாவட்டம் பாலமுனை அரசடி வீதிக்கு (105 மீற்றர்) கொங்ரீட் மற்றும் வீதியோரம் தடுப்புச் சுவர் அமைப்பதற்கான ஆரம்ப நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

பாராளுமன்ற உறுப்பினர் அபூபக்கர் ஆதம்பாவா, வீதி அபிவிருத்தி திணைக்கள பிரதம பொறியியலாளர் எம். முனாஸ், விவசாயிகள், பொது மக்கள் எனப் பலரும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (எ)

# ப.நோ.கூ. சங்க பணியாளர்களுக்கு செயல்திறன் விருத்தி செயலமர்வு

அக்கரைப்பற்று, செப். 15

கிழக்கு மாகாண கூட்டுறவுச் சங்கங்களின் பணியாளர்களின் செயல்திறனை விருத்தி செய்யும் நோக்கில் பல்வேறு பயிற்சித் திட்டங்களை கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் முன்னெடுத்து வருகிறது.

இதன் ஓர் அங்கமாக அக்கரைப்பற்றில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற பயிற்சி செயலமர்வில் தலைமை கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எம். பரீட், சிரேஷ்ட கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எம். அஷ்ரப் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டு விரிவுரைகளை நிகழ்த்தினர்.(எ)

# நானுஓயாவில் நடனமாடிய இந்திய சுற்றுலா பயணிகள்



நானுஓயா, செப். 15

நுவரெலியா, நானுஓயா ரயில் நிலையத்தில் இந்திய சுற்றுலாப் பயணிகள் நேற்று முன்தினம் சனிக்கிழமை பாடல்களை பாடி அதற்கேற்ப உற்சாகமாக நடனமாடி மகிழ்ந்தனர்.

கொழும்பிலிருந்து பதுளை நோக்கிச் சென்ற சிறப்பு ரயில் கால தாமதமாக சென்றதால் ரயில் நிலையத்தில் இருந்த இந்திய சுற்றுலாப் பயணிகள் நீண்ட நேரம் காத்திருந்தனர். இருப்பினும், சலித்துக்கொள்ளாமல் நடனமாடி பொழுதை மகிழ்ச்சியுடன் கழித்தனர்.

குறித்த குழுவினர் நடனமாடுவதை காட்டும் காணொலி சமூக ஊடகங்களில் வைரலாகி வருகின்றது. (எ)

பெருந்தோட்ட பகுதியில் முறையான

# "அஞ்சல் சேவையை முன்னெடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்"

நுவரெலியா, செப். 15

பெருந்தோட்ட பகுதியில் முறையான அஞ்சல் சேவையை முன்னெடுக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சர்வமத குழுவின் தலைவர் நந்தகுமார் குருக்கள் தெரிவித்தார்.

நுவரெலியா மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற பெருந்தோட்ட சமூகத்தினருக்கான அஞ்சல் சேவை அணுகலை மேம்படுத்துவதற்கான கலந்துரையாடலின் பின்னர் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.



இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் ஏற்பாட்டில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது. அஞ்சல் உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள், பெருந்தோட்ட இளைஞர் - யுவதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (எ)


# வீதியில் திடீரென தீப்பற்றிய ஓட்டோ

நாவலப்பிட்டி, செப். 15

கண்டி மாவட்டம், நாவலப்பிட்டி தெகிந்த வீதியில் நேற்று முன்தினம் அதிகாலை பயணித்த ஓட்டோ ஒன்று திடீரென தீப்பிடித்து எரிந்தது.

ஓட்டோவின் உரிமையாளர் நாவலப்பிட்டி தெகிந்த பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட பின் மீண்டும் திரும்புகையில் விபத்து ஏற்பட்டதாகவும் தீ விபத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்றும் நாவலப்பிட்டி பொலிஸார் தெரிவித்தனர்.

ஓட்டோவில் ஏற்பட்ட எரிபொருள் கசிவே தீ விபத்துக்கு காரணம் என பொலிஸார் கூறினர்.



வரலாற்று பிரசித்தி பெற்ற அம்பாறை மாவட்டம் நிந்தவூர் மடத் தடி சிறீ மீனாட்சி அம்பாள் ஆலயத்தின் பரிவார ஆலயமான சுந் தரேஸ்வரர் சிவன் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் அண்மையில் சிறப்பாக நடைபெற்றது.

(படங்கள் :- வி. ரி. சகாதேவராஜா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரச்னைகளுக்கு...

ஏனைய நாடுகளுடனும் இதுவிடயம் குறித்து அணுகியுள்ளோம். சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி இனப்படுகொலை நடந்தது என்பதற் கான ஒரு கூறாகும்.

மாகாண சபைகள் தேர்தலை இழுத்தடிக்க வேண்டிய தேவை இல்லை. தனிநபர் பிரேரணை மூலமாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சருக்கு வழங்கப்பட்ட கால அவகாசத்தை இதற்கு சாதகமாக அரசாங்கம் பயன்படுத்துகிறது. அதனை விடுத்து உடனடியாக மாகாண சபைகள் தேர்தலை நடத்த வேண்டும்.

உள்ளூராட்சி சபைகளின் தவிசாளர்களை ஒதுக்கி தேசிய மக்கள் சக்தி ஒவ்வொரு மாவட்டத்திலும் செயல்படுகிறது. இது தொடர்பிலும் ஜனாதிபதியுடன் பேசுவதற்கு தீர்மானித்துள்ளோம். கடிதம் மூலம் இதற்கான நேரத்தைக் கோருவதற்கு தீர்மானித்துள்ளோம் - என்றார். (ஐ)

## நீதி...

அறிவித்து, நாடு திரும்பியுள்ளது. இந்த நிலையிலேயே நீதி அமைச்சர் தலைமையில் சிறப்பு குழு ஜெனிவா செல்லவுள்ளது.

இந்தக் குழு ஜெனிவாவில் உள்ளக நடவடிக்கைகளின் முன்னேற்றத்தை சுட்டிக்காட்டவும் உள்ளக பொறிமுறை விசாரணைகளை வலுப்படுத்தும் செயல்முறைகளை வலுப்படுத்தும் முயற்சிகளிலும் ஈடுபடும் என்றும் கூறப்படுகிறது.

## சிறீநேசன்...

வேம்பில் நடந்த தமிழ் அரசு கட்சியின் மத்தியகுழு கூட் டத்துக்கு சிறீநேசன் சென்றுவிட்டுத் திரும்பியபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதில், காயமடைந்த அவர் களுவாஞ்சிக்குடி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

விபத்து குறித்த விசாரணைகளை மட்டக்களப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## பாதுகாப்பு...

அதற்காக மனித உரிமைகள் மீறல்கள் இடம்பெற்றுள்ளன என்று எண்ணிவிடக் கூடாது என்ற அடிப்படையில் பிரதி பாதுகாப்பு அமைச்சர் தனது கருத்தைக் கூறியிருக்கிறார்.

இன்று செம்மணி மனித புதைகுழிகள் சாட்சிகளாகக் கருதப்படுகின்ற நிலையிலே, அதுகூட மனித உரிமைகள் மீறலாக இருக்காது எனும் அடிப்படையில் பாதுகாப்பு பிரதி அமைச்சரின் கருத்துகள் அமைந்துள்ளன.

பாதுகாப்பு பிரதி அமைச்சர் இந்தக் கருத்தை தெரிவித்தமை கண்டனத்திற்குரிய விடயம். இந்த அரசாங்கம் செம்மணி மனிதப் புதைகுழி தொடர் பில் நீதியான விசாரணை செய்வதாகக் கூறுகின்ற நிலையில் பாதுகாப்பு பிரதி அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர்மீது பாராளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட்டபோது சபாநாயகர் அதற்கான அனுமதியை வழங்கவில்லை. அவர் மீது குற்றச்சாட்டுகள் உள்ளன. அவரின் கருத்துகளை வைத்துப் பார்க்கின்றபோது அவர் உண்மையில் மனித உரிமைகள் மீறலில் சம்பந்தப்பட்டுள்ளாரா? என்ற சந்தேகம் எழுந்துள்ளது.

தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்டுள்ள அநீதிகள், கொடூரங்கள், படுகொலைகள் அத்தனையும் உண்மை இல்லை என்று சொல்கின்ற அளவுக்கு பாதுகாப்பு பிரதி அமைச்சரின் கருத்து அமைந்துள்ளது. இது, தமிழ் மக்களின் மனங்களில் ஆறாத வடுவை ஏற்படுத்தியுள்ளது. எனவே அரசாங்கம் அவரை பதவி நீக்கம் செய்து உயிர்த்த ஞாயிறு சம்பந்தமாகவும் ஏனைய விடயங்கள் சம்பந்தமாகவும் விசாரணை செய்ய வேண்டும் - என்றார். (ஐ)

## ஐஸ்...

வட மாகாண குற்றத்தடுப்பு பிரிவினருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதேபோன்று, யாழ்ப்பாணம் நகரை அண்டிய திருநகர் பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் இருவர் நேற்று கைது செய்யப்பட்டனர். கைதான இருவரும் 20, 21 வயது இளைஞர்களாவர். அவர்களிடமிருந்து 539 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவின் அடிப்படையில் போதைப் பொருள் தடுப்பு பிரிவால் சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர். (ஐ)

## மனித உரிமை...

இலங்கைக்கான பொறுப்புக்கூறலுக்கான கால அவகாசமும் நீடிக்கப்படவுள்ளது.

இந்தத் திட்டம், இலங்கையில் மனித உரிமைகள் அல்லது சர்வதேச மனிதாபிமானச் சட்டத்தின் கடுமையான மீறல்களுக்கான எதிர்கால பொறுப்புக்கூறல் செயல்முறைகளுக்கான, சாத்தியமான உத்திகளை உருவாக்குவதற்கு உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன், தகுதிவாய்ந்த அதிகார வரம்பைக் கொண்ட உறுப்பு நாடுகள் உட்பட, தொடர்புடைய நீதித்துறை நடவடிக்கைகளை ஆதரிப்பதற்கும், சான்று சேகரிக்கும் பொறிமுறையாகவும் இருக்கும். இந்த புதிய தீர்மானம், இலங்கை அரசாங்கத்தின் ஊழல் எதிர்ப்பு முயற்சிகளை ஏற்றுக் கொள்கிறது.

நாட்டில் பல தசாப்தங்களாக நிலவும் பிளவுபடுத்தும் இனவெறி அரசியல் மற்றும் இன மோதல்களின் விளைவாக ஏற்பட்ட தீங்குகள், துன்பங்களை ஒப்புக்கொள்வதையும் இந்தத் தீர்மானம் ஏற்கிறது.

இதேநேரத்தில், பயங்கரவாதத் தடைச் சட்டத்தை இரத்து செய்து நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டத்தைத் திருத்த வேண்டியதன் அவசர தேவையையும் அது வலியுறுத்துகிறது.

இலங்கையில் பல புதைகுழி தளங்களை அடையாளம் காண்பது குறித்தும் - போதுமான வளங்களுடன் தொடர்ந்து பணியாற்ற வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தும் அதேவேளை, காணாமல் போனவர்கள் தொடர்பான பணிமனையின் சுயாதீனமான மற்றும் பயனுள்ள செயல்பாட்டின் முக்கியத்துவத்தையும் இந்தத் தீர்மானம் கோருகிறது.

சர்வதேச தரநிலைகளுக்கு ஏற்ப அகழ்வுகளை நடத்துவதற்கு போதுமான நிதி, மனித மற்றும் தொழில்நுட்ப வளங்களை உறுதி செய்வதற்கு சர்வதேச ஆதரவை முன்கூட்டியே பெறவும் இது வழிவகுக்கிறது.

அத்துடன், மனித உரிமைகள் மீறல் மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் உள்ளிட்ட வழக்குகளை விசாரித்து, வழக்குத் தொடரும்போது திறன்களை வலுப்படுத்த சர்வதேச உதவியை நாடவும் இந்த தீர்மானம் இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துகிறது.

ஒரு சுயாதீனமான பொது வழக்கு தொடுநர் அமைப்பை நிறுவுவதற்கான இலங்கை அரசாங்கத்தின் உறுதிப்பாட்டை, இந்த தீர்மானம் பாராட்டி ஒப்புக்கொள்கிறது. அதே நேரத்தில் இது முற்றிலும் சுயாதீனமாகவும் பயனுள்ளதாகவும் வலுவாகவும் இருக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறது. அத்துடன், ஏற்கனவே பல தசாப்தங்களில் செய்யப்பட்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் தொடர்பில் ஒரு சுயாதீனமான சிறப்பு ஆலோசகரைக் கொண்ட ஒரு நீதித்துறை பொறிமுறையை உருவாக்குவது குறித்து பரிசீலிக்க, இலங்கை அரசாங்கத்தை இந்த தீர்மானம் ஊக்குவிக்கிறது என்றும் கூறப்படுகிறது. (ஐ)

# அமெரிக்கா செல்கிறார் அநுர

கொழும்பு, செப். 15

ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க எதிர்வரும் 22ஆம் திகதி அமெரிக்கா செல்லவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபை அமர்வில் பங்கேற்ப தற்காக அவர் அமெரிக்கா செல்கிறார். இந்தப் பயணத்தில் அவர், பல நாடுகளின் தலைவர்களுடன் இரு தரப்பு பேச்சுகளை நடத்தவுள்ளார்.

மேலும், ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலா ளர் அன்ரனியோ குட்டெரெஸையும் ஜனாதிபதி சந்திக்கவுள்ளார்.

அமெரிக்க பயணத்தைத் தொடர்ந்து அவர், ஜப்பான் அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் எதிர்வரும் 26 ஆம் திகதி ஜப்பான் பயணமாகிறார். (ஐ)

# விபத்தில் சிக்கிய முதியவர் சிகிச்சை பலனின்றி மரணம்

யாழ்ப்பாணம், செப். 15

விபத்தில் சிக்கிய முதியவர் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்தார்.

திருநெல்வேலி - கலாசாலை வீதி பகுதியை சேர்ந்த வல்லிபுரம் மகாலிங்கம் (வயது 72) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் அறிய வருபவை வருமாறு,

முதியவர், கடந்த 5ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் கிளிநொச்சி சென்று வீடு திரும்பிக் கொண்டிருந்தார். ஆசைப்பிள்ளைஏற்றம் பகுதியில் சைக்கிள் ஒன்றுடன் மோதி விபத்துக்கு உள்ளானார்.

இதில், படுகாயமடைந்த அவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு பின்னர் யாழ். போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். இந்நிலையில், அங்கு அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இந்த மரணம் தொடர்பான விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். உடற்கூற்று பரிசோதனைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஐ-05)

# வாகனத்தை அரசிடம் வழங்கினார் ஹேமா

கொழும்பு, செப். 15

மறைந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸவின் மனைவி ஹேமா பிரேமதாஸ அரசாங்கத்தால் தனக்கு கொடுக்கப்பட்ட வாகனத்தை மீண்டும் அரசாங்கத்திடம் ஒப்படைத்துள்ளதாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளை இரத்து செய்யும் சட்ட மூலம் கடந்த புதன்கிழமை பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டது.

இதனால், அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட வாகனத்தை ஹேமா பிரேமதாஸ மீண்டும் அரசாங்கத்திடமே ஒப்படைத்தார் என்று ஜனாதிபதி செயலகம் தெரிவித்துள்ளது. (ஐ)

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் புத்தளத்தில் உதவி திட்டங்கள்

வடமராட்சி, செப். 15

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தால் 3 இட்சத்து 10 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உதவிகள் புத்தளம் மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ளன.

புத்தளம் இந்து மத்திய கல்லூரியின் கோரிக்கைக்கு அமைவாக தரம் 01 தொடக்கம் தரம் 05 வரை கல்வி கற்கும் 200 மாணவர்களுக்கு ஒரு இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் மெறுமதியான சில்வர் உணவுப் பெட்டிகள் வழங்கப்பட்டன.

கற்பிட்டி வீதி, அம்மா தோட்டம், பள்ளிவாசல்துறையில் அமைந்துள்ள சிறீ சித்தி விநாயகர் ஆலயத்தின் கோரிக்கைக்கு அமைவாக கட்டட கட்டுமானப் பணிக்காக ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் நிதி ஆலய நிர்வாகத்திடம் வழங்கப்பட்டது.

அத்துடன், ஆலயத்துக்கான விநாயகர், சிவலிங்கம், பார்வதி, வைரவர் ஆசனகற்களுடன் கருங்கல்லில் செதுக்கப்பட்டு வழங்குவதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த உதவிகளை சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேற்று முன்தினம் நேரில் சென்று வழங்கி வைத்தார். (ஐ-02)

## தியாக தீபம்...

அமைந்துள்ள திலீபன் நினைவிடத்தில் நினைவேந்தல் ஆரம்பமாகும்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் துறை பொறுப்பாளரான திலீபன் இந்திய அமைதிப் படையிடம் ஐந்து அம்சக் கோரிக்கைகளை 1987 செப்ரெம்பர் 15ஆம் திகதி முன்வைத்து உணவையும் நீரையும் தவிர்த்து போராட்டத்தை முன்னெடுத்தார். அவரின் கோரிக்கைகள் எதுவும் நிறைவேற்றப்படாத நிலையில் 1986 செப்ரெம்பர் 26ஆம் திகதி முற்பகல் 10.48 மணிக்கு உயிர்நீத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## பழைய...

தாமதமின்றி மாகாண சபைகள் தேர்தலை நடத்த அரசாங்கம்மீது அழுத்தம் அதிகரித்து வரும் நிலையிலேயே இந்தத் திட்டத்தை அரசாங்கம் பரிசீலிக்கிறது என்றும் கூறப்படுகிறது.

இந்தநிலையில் கடந்த வாரம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை அமர்வில் இந்தியப் பிரதிநிதி மாகாண சபைகள் தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்தை வலியுறுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## குருக்கள்...

அகழ்வுப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன என்றும் அவர் கூறினார்.

இதேசமயம், குருக்கள்மடம் மனிதப் புதைகுழி அகழ்வு பணிகளை முன்னெடுப்பது தொடர்பான விசாரணை மற்றும் நிதி ஒதுக்கீடு தொடர்பான அறிக்கை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என காணாமல் போனோர் தொடர்பான பணிமனை அறிக்கை விடுத்திருந்தது. இதற்கமைய, எதிர்வரும் 18ஆம் திகதி வியாழக்கிழமை களுவாஞ்சிக்குடி நீதிவானிடம் இது தொடர்பான விசாரணை அறிக்கைகள் சமர்பிக்கப்படவுள்ளன என்று அந்தப் பணிமனை தெரிவித்துள்ளது. (ஐ)

## மாகாண...

தற்போது அது அதிகாரிகள் கையில் மட்டுமே இருப்பது ஜனநாயகத்துக்குப் புறம்பானது.

வாக்களிக்கும் உரிமை அரசமைப்பின் 3ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளபடி மக்களின் இறையாண்மை அதிகாரத்தின் ஒரு பகுதியாகும். நீண்டகால தாமதம் ஜனநாயக செயல்முறைகள்மீதான மக்களின் நம்பிக்கையை பலவீனப்படுத்தியுள்ளது என்றும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# மித்தெனியவில் சிக்கிய இரசாயனம் 'ஐஸ்' உற்பத்திக்கு பயன்படுவதே!

### ஆய்வில் உறுதியானது

கொழும்பு, செப். 15

மித்தெனியவில் அண்மையில் கண்டறியப்பட்ட இரசாயனம் ஐஸ் போதைப்பொருள் தயாரிக்கப் பயன்படுத்தப்படுவது என்று தேசிய ஆபத்தான ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபையின் (என். டி. டி. சி. பி.) விசாரணைகளில் உறுதிப்படுத் தப்பட்டுள்ளது.

கெஹெல்பத்தர பத்மே, குடு நிலங்க ஆகியோருக்கு சொந்தமானது என்று கருதப்படும் சுமார் 50 ஆயிரம் கிலோ இரசாயனத்தை மேற்கு வடக்கு குற்றப்பிரிவு கடந்த 6ஆம் திகதி மித்தெனிய பகுதியில் கண்டுபிடித்தது.

இந்த இரசாயனத்தின் மாதிரிகள், சோதனைக்காக தேசிய ஆபத்தான ஔடதங்கள் கட்டுப்பாட்டு சபை மற்றும் அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டன.

இவ்வாறு வழங்கப்பட்ட 20 மாதிரிகளில் 17 மாதிரிகள் ஐஸ் போதைப்பொருள் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் இரசாயனம் என்று உறுதியாகியுள்ளது. (ஐ)

## ரூ. 1,800 கோடி இலாபமீட்டியது பெற்றோலிய கூட்டுத்தாபனம்!

கொழும்பு, செப். 15

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் இந்த ஆண்டின் முதல் 6 மாதங்களில் ஆயிரத்து 800 கோடி ரூபாய் இலாபம் ஈட்டியுள்ளது.

இவ்வாறு ஈட்டப்பட்ட இலாபம் பெற்றோலிய துறையை மேம்படுத்தும் திட்டங்களை தொடங்க பயன்படுத்தப்படுகிறது என்று இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் நிர்வாக அதிகாரி மயூர நெத்திகுமார தெரிவித்தார்.

அத்துடன், எரிபொருள் விநியோகத்தை மேம்படுத்தவும், விமானப் போக்குவரத்து நடவடிக்கைகளை அதிகரிப்பதற்கும், முத்துராஜவலை முனையத்திலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு விமான எரிபொருள் குழாய் அமைக்கும் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச எரிபொருள் விலைகளின் ஸ்திரத்தன்மை மற்றும் உள்நாட்டு சந்தையில் மேற்கொள்ளப்பட்ட விலை சூத்திர கொள்கை சீர்திருத்தங்கள் ஆகியவற்றின் விளைவாக இவ்வாறு இலாபமீட்டப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## சட்டவிரோத வாகனங்கள் விசாரணைகள் ஆரம்பம்!

கொழும்பு, செப். 15

சட்டவிரோதமாக உரித்தாக்கப்பட்ட 25 வாகனங்கள் குறித்து மத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவு விசாரணைகளைத் தொடங்கியுள்ளது.

இவற்றுடன் தொடர்புடைய சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். விசாரணைகளின் போது பெறப்பட்ட சரிபார்க்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அவர்கள் கைது செய்யப்படுவார்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சட்டவிரோதமாக பதிவு செய்தல் மற்றும் போலி ஆவணங்களை பயன்படுத்தி வாகனங்களை ஒன்று சேர்த்தல் உள்ளிட்ட பல குற்றச்சாட்டுகளின் கீழ் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதுபோன்ற வாகனங்களை வைத்திருப்பவர்களில் பெரும்பாலான நபர்கள் அரசியலுடன் தொடர்புடையவர்கள் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

## கெஹலியவின் மகன்மீதும் குற்றப்பத்திரிகை தாக்கல்!

கொழும்பு, செப். 15

முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவின் மகன் ரமித் ரம்புக்வெலவுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றத்தில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவால் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

27 கோடி ரூபாய்க்கு அதிக பெறுமதியான சொத்துகளை சட்டவிரோதமாக சம்பாதித்த குற்றச்சாட்டின் பேரில் ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழ் ரமித் ரம்புக்வெலவுக்கு எதிராக கடந்த வெள்ளிக்கிழமை இந்தக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. (ஐ)

# முன்னாள் ஜனாதிபதிகள், எம்.பிக்களுக்கு வரையறுக்கப்பட்ட சலுகைகளை வழங்குக!

### ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை

கொழும்பு, செப். 15

நாட்டில் ஜனாதிபதி ஒருவர் ஓய்வு பெற்ற பின்னர் சில சிறப்புரிமைகள் வழங்கப்பட வேண்டும். ஆனால், அவை வரையறுக்கப்பட்டவையாக இருக்க வேண்டும். அதேபோன்று பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியத்தை நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டால், தேவையானோருக்கு அதற்கு விண்ணப்பிப்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜ கருணா தெரிவித்துள்ளார்.

நேற்று கம்பஹாவில் நடைபெற்ற மக்கள் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நாட்டில் ஜனாதிபதி ஒருவர் ஓய்வு பெற்ற பின்னர் சில சிறப்புரிமைகள் வழங்கப்பட வேண்டும். ஆனால், அவை வரையறுக்கப்பட்டவையாக இருக்க வேண்டும். தமக்கான சிறப்புரிமைகளை அதிகபட்சமாக பயன்படுத் திய முன்னாள் ஜனாதிபதிகளும் இருக்கின்றனர். எனவேதான் வரையறுக்கப்பட்ட சிறப்புரிமைகள் வழங்கப்பட வேண்டும் என வலியுறுத்துகிறோம். அதே போன்று பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஓய்வூதியத்தை நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டால், தேவையானோருக்கு அதற்கு விண்ணப்பிப்பதற்கான வாய்ப்பு வழங்கப்பட வேண்டும். இவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுத்து மக்களுக்கு சுமையைக் குறைப்பதாக அரசாங்கம் கூறினாலும் விரைவில் 7 சத வீதத்தால் மீண்டும் மின் கட்டணத்தை அதிகரிக்கவுள்ளதாக தகவல்கள் கிடைத்துள்ளன. மூன்றில் ஒரு மடங்கால் மின் கட்டணத்தை குறைப்பதாகக் கூறி மக்களுக்கு வாக்குறுதி யளித்து அவர்களை இந்த அரசாங்கம் ஏமாற்றியிருக்கிறது. உண்மையில் மக்கள் நலன் குறித்து அரசாங்கத்துக்கு அக்கறையிருந்தால் இந்த மின்சார கட்டண அதிகரிப்பைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

323 கொள்கலன்கள் பரிசீலனை இன்றி விடுவிக் கப்பட்டுள்ளன. ஆனால், அதற்கு அரசாங்கம் பொறுப் பேற்கவில்லை. ஆனால், அரசாங்கமே அதற்கு அனுமதி யளித்ததாக துறைமுக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். அரசாங்கத்தின் இவ்வாறான நடவடிக்கைகளால் தேசிய பாதுகாப்பிற்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

எனவே, இதிலிருந்து தப்பிக்க முயற்சிக்காமல் அதற்கான பொறுப்பை அரசாங்கம் ஏற்க வேண்டும். எதிர்க்கட்சிகள் உட்பட யார் கூறுவதையும் கேட்காமல் ஏதேச்சதிகார போக்கிலேயே அரசாங்கம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

பாராளுமன்றத்துக்கு உள்ளேயே அரசாங்கம் இவ் வாறு செயல்படுகின்றது எனில் அதற்கு வெளியில் எவ்வாறு செயல்படும் என்பதை உணர்ந்து கொள்ள முடியும். பாராளுமன்றத்துக்கு அப்பால் ஜனநாயகத்துக்கு விரோதமாக அரசாங்கம் அடக்குமுறைகளை கையாள்கின்றது. அதற்கெதிராக நாம் தொடர்ந்தும் போராடுவோம். அரசியல் ரீதியாக ஏனைய கட்சிகளுடன் கொள்கை ரீதியான முரண்பாடுகள் காணப்பட்டாலும், இவ்வாறான செயல்பாடுகளில் இணைந்து செயல்பட முயற்சிக்கிறோம் - என்றார். (ஐ)

## மியன்மார் மோசடி முகாம்களில் இன்னமும் 13 இலங்கையர்கள்!

கொழும்பு, செப். 15

மியன்மாரின் சைபர் க்ரைம் மோசடி முகாம்களில் மேலும் 13 இலங்கையர்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தகவல் கிடைத்துள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

மியன்மாரில் மியாவாடி பகுதியில் உள்ள இந்த சைபர் க்ரைம் மோசடி முகாம்கள் பயங்கரவாதிகளால் இயக்கப்படுகின்றன.

சுற்றுலா வீசாவில் மியன்மாருக்கு சென்ற இலங்கையர்களே இவ்வாறு சைபர் க்ரைம் மோசடி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த சைபர் க்ரைம் மோசடி முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பல இலங்கையர்கள் மியன்மார் மற்றும் தாய்லாந்தில் உள்ள இலங்கை தூதரகங்களின் ஒத்துழைப்பு மற்றும் மியன்மார் மற்றும் தாய்லாந்து அரசாங்கங்களின் உதவியுடன் பல சந்தர்ப்பங்களில் இலங்கைக்கு மீண்டும் அழைத்துவரப்பட்டுள்ளனர்.

மீதமுள்ள 13 இலங்கையர்களும் இலங்கைக்கு மீண்டும் அழைத்துவர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

# தாய், சேய் சுகாதார நிலையங்களில் மருத்துவ மையம் ஆரம்பிக்கப்படும்

கொழும்பு, செப். 15

அரச மருத்துவமனைகளில் நிலவும் நெரிசலை சமாளிக்க தாய், சேய் சுகாதார நிலையங்களில் மருத்துவ மையங்களை ஆரம்பிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன் முதல் கட்டமாக, தெரிவுசெய்யப்பட்ட 5 தாய் மற்றும் சேய் சுகாதார நிலையங்களில் முன்னோடித் திட்டங்கள் அடுத்து மாதம் தொடங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்த ஆண்டு இறுதிக்குள் இவ்வாறான 50 மருத்துவ மையங்களை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளது என்று சுகாதார அமைச்சின் பணிப்பாளர்கள் குழு கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த ஆண்டு இறுதிக்குள், நாடு முழுவதும் ஆயிரம் மருத்துவ மையங்களைத் தொடங்குவதே அரசாங்கத்தின் இலக்கு என்றும் தெரிவிக்கப்பட்டது.

தேர்ந்தெடுக்கப்பட்ட தாய், சேய் சுகாதார நிலையங்களின் புதுப்பித்தல் மற்றும் விரிவாக்க பணிகள் ஏற்கனவே தொடங்கப் பட்டுள்ளன.தாய் மற்றும் சேய் சுகாதார நிலையங்கள் வழமையான முறையில் செயல்படும் என்றும், அவற்றுக்கு மேலதிகமாக மருத்துவ மையங்க ளைச் செயல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்த மருத்துவ மையங்களில் வெளிநோயாளர் பிரிவுகள், பிணியாய்வு நிலையங்கள் மற்றும் ஆய்வக வசதிகள் இடம்பெறும், இது மருத்துவமனைகளில் ஏற்படும் சன நெரிசலை குறைக்கும் எனக் கூறப்படுகிறது. (ஐ)

## முன்னாள் ஜனாதிபதிகள் பயன்படுத்திய வீடுகள் அரச அலுவலகங்களாக மாறும்!

கொழும்பு, செப். 15

முன்னாள் ஜனாதிபதிகளிடமிருந்து மீண்டும் கையகப்படுத்தப்பட்ட அதிகாரப்பூர்வ குடியிருப்புகளை அரச அலுவலகங்களாகவோ அல்லது வருவாய் ஈட்டும் நோக்கங்களுக்காகவோ பயன்படுத்த அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இந்தக் கட்டடங்கள் எவ்வாறு பொருளாதார ரீதியாகப் பயன்படுத்தப்படும் என்பது குறித்த இறுதி முடிவை நிதி அமைச்சு எடுக்கும்.

அரசாங்க நிதியில் பராமரிக்கப்படும் இந்த சொத்தை பொதுமக்களுக்கு நேரடியாக பயனளிக்கும் முதலீடுகளுக்குப் பயன்படுத்துவது அரசாங்கத்தின் முக்கிய நோக்கமாகும் என்று பொதுப் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்தார்.

முன்னர் ஒரு குடும்பத்துக்கு மட்டுமே சொந்தமானதாக இருந்த இந்த மதிப்புமிக்க வீடுகள் முழு மக்களுக்கும் பயனளிக்கும் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படுவது மக்களுக்குக் கிடைத்த வெற்றி என்று அமைச்சர் சுட்டிக்காட்டினார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.09.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org